# வணிகவரித் துறையும் - பதிவுத்துறையும் - மாநில அரசுக்கு

# 87.5 சதவிகித வருவாயை ஈட்டித் தரும் பெருமைமிகு துறைகளாக உள்ளன!

## சட்டப் பேரவை – மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் பி.மூர்த்தி பெருமிதம்!

**சென்னை, ஜூன் 28 -**

**சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் பி.மூர்த்தி, “மாநில அரசின் வரி வருவாயில் 73.5 சதவிகிதம் வணிகவரித் துறை மூலமாகவும், 14 சதவிகிதம் பதிவுத்துறை மூலமாகவும் பெறப்பட்டு, அரசிற்கு வரும் வருவாயில் 87.5 சதவிகிதம் வருவாயை ஈட்டித் தரும் பெருமைமிகு துறைகளாக, வணிகவரித்துறை மற்றும் பதிவுத்துறை உள்ளன.” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அளித்த பதிலுரை வருமாறு:-

தமிழ் இனத்தின் தன்னிகரில்லாத் தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்!

திராவிட நாயகனாக இருந்து - இப்போது இந்தியாவின் நாயகனாக உயர்ந்து நிற்கும் - இந்த தேசமே வியந்து நோக்கும் கலங்கரை விளக்கமான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

நாற்பதுக்கு நாற்பது என்பது இந்தியாவில் நல்லாட்சி அமையவேண்டும் என்பதற்கான வாக்கு மட்டுமல்ல -

தமிழ்நாட்டில் நல்லாட்சி நடந்து வருகிறது என்பதற்கு அத்தாட்சியான வாக்கும் ஆகும்.

அத்தகைய நல்லாட்சியின் நாயகராம் - திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் வாழும் காலத்தில் நாங்களும் வாழ்கிறோம் என்பதை விட எமக்கு வாழ்நாள் பேறு ஏதும் இருக்க முடியாது.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டுக்குக் கொடுத்த மாபெரும் கொடை - நமது முதல்வர் அவர்கள் என்றால்- நமது முதல்வர் அவர்கள் இந்த நாட்டுக்குக் கொடுத்திருக்கும் மாபெரும் கொடை இளைஞரணிச் செயலாளர் - உதயநிதி அவர்கள்.

நிகழ்கால ஒளிகாட்டியாகவும் - வருங்கால வழிகாட்டியாகவும் திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களுக்கும் -

பேரவைத் தலைவர், அவை முன்னவர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தை தெரிவித்து, எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாநில அரசின் வரி வருவாயில் 73.5 சதவிகிதம் வணிகவரித் துறை மூலமாகவும், 14 சதவிகிதம் பதிவுத்துறை மூலமாகவும் பெறப்பட்டு, அரசிற்கு வரும் வருவாயில் 87.5 சதவிகிதம் வருவாயை ஈட்டித் தரும் பெருமைமிகு துறைகளாக, வணிகவரித்துறை மற்றும் பதிவுத்துறை உள்ளன.

கழக அரசு பொறுப்பேற்ற போது, GST இழப்பீட்டுத் தொகை 10 ஆயிரத்து 602 கோடி ரூபாயை சேர்த்து, 96 ஆயிரத்து 471 கோடி ரூபாயாக இருந்த வணிகவரித் துறையின் வருவாய், 2021-2022-ஆம் நிதியாண்டில் GST இழப்பீட்டுத் தொகை 7 ஆயிரத்து 736 கோடி ரூபாயை சேர்த்து, ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 93 கோடி ரூபாயாக உயர்ந்தது. அதுவே, 2022-2023-ஆம் நிதியாண்டில், GST இழப்பீட்டுத் தொகை 16 ஆயிரத்து 215 கோடி ரூபாயை சேர்த்து, ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 650 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. மேலும், 2023-2024-ஆம் நிதியாண்டில், 30.6.2022-க்கு பின்னர் GST இழப்பீட்டுத் தொகை ஒன்றிய அரசால் நிறுத்தப்பட்ட நிலையிலும், வணிகவரித் துறை தனது தொடர் முயற்சிகளின் மூலம், GST நிலுவை இழப்பீட்டுத் தொகை 4 ஆயிரத்து 574 கோடி ரூபாயை சேர்த்து, ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 580 கோடி ரூபாய் வரி வருவாய் ஈட்டியது.

இந்த வகையில் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் வணிகவரித் துறையானது திரளாக 3 லட்சத்து 69 ஆயிரத்து 323 கோடி ரூபாய் வரி வருவாயை ஈட்டியுள்ளது.

கழக அரசு பொறுப்பேற்ற போது, 10 ஆயிரத்து 643 கோடி ரூபாயாக இருந்த பத்திரப் பதிவுத் துறையின் வருவாய், 2021-2022-ஆம் நிதியாண்டில் கூடுதலாக 3 ஆயிரத்து 270 கோடி ரூபாய் ஈட்டியதால், அந்த ஆண்டின் மொத்த வருவாய் 13 ஆயிரத்து 913 கோடி ரூபாயாக உயர்ந்தது. 2022-2023-ஆம் நிதியாண்டில், 2020-2021-ஆம் ஆண்டை விட கூடுதலாக 6 ஆயிரத்து 654 கோடி ஈட்டியதால் 17 ஆயிரத்து 297 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டது. மேலும், 2023-2024-ஆம் நிதியாண்டில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்பு ஏற்பட்ட போதிலும், 2020-2021-ஆம் ஆண்டை விட 8 ஆயிரத்து 182 கோடி கூடுதலாக ஈட்டியதால் கடந்த ஆண்டில் பதிவுத் துறையின் வருவாய் 18 ஆயிரத்து 825 கோடி ரூபாயாக உயர்ந்தது.

இவ்வகையில், கடந்த 3 ஆண்டுகளில் திரளாக 50 ஆயிரத்து 36 கோடி ரூபாய் வருவாய் ஈட்டி பதிவுத்துறை சாதனை படைத்துள்ளது.

இவ்வாறாக, கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த 3 ஆண்டுகளில் வணிகவரித் துறையும், பதிவுத் துறையும் சேர்ந்து மொத்தமாக 4 லட்சத்து 19 ஆயிரத்து 359 கோடி ரூபாய் வரி வருவாய் ஈட்டி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளன. இவ்விரு துறைகளால் வசூலிக்கப்படும் இந்த வருவாயின் பங்களிப்பானது, தமிழ்நாடு அரசு புதுமையான பல திட்டங்களை செயல்படுத்தி, மாநிலத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் ஆதாரமாக உள்ளது.

### சேலம் நுண்ணறிவுக் கோட்டத்திற்கு – ரூ. 9.84 கோடியில் புதிய கட்டிடம்!

### கடலூர் கோட்டத்தில் ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டிடம் இடிக்கப்பட்டு ரூ. 23 கோடியில் புதிய வணிகவரிக் கட்டிடம்!

**வணிகவரித்துறை**

வணிகவரித் துறை, பல்வேறு திறம்பட்ட வரி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சிறந்த வரி நிர்வாகத்தை உறுதி செய்து மாநிலத்தின் நிதி ஆதாரங்களை திரட்டுவதில் முன்னோடியாக விளங்குகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் வணிகவரித் துறையில் முன்னெடுக்கப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளின் வாயிலாக தற்போது வரி வருவாய் வசூலில் சிறப்பான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

இதன் பலனாக, 2023-2024-ஆம் ஆண்டில், மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் மாநில வரம்பிற்குள்ளான வரி செலுத்துவோர் தாக்கல் செய்துள்ள மாதாந்திர வரி விவர அறிக்கைகளில் செலுத்திய வரித்தொகை மட்டுமல்லாமல் 2,601.57 கோடி ரூபாய் கூடுதலாக வசூலிக்கப்பட்டு 10.98 சதவிகிதம் பங்களிக்கப்பட்டுள்ளது.

வரி வசூலில் முதன்மைத் துறையாக இருந்த போதிலும் வணிகவரித் துறையின் மொத்த நிர்வாக செலவினமானது, இத்துறையின் வருவாயில் அரை சதவிகிதத்திற்கும் குறைவாகவே தொடர்ந்து இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2020-2021-ஆம் ஆண்டில், மொத்த வருவாயில் 0.48 சதவிகிதமாக இருந்த நிர்வாக செலவினம், தற்போது 2023-2024-ஆம் ஆண்டில் 0.38 சதவிகிதமாக குறைந்துள்ளது.

01.07.2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், பதிவு, திருப்புத் தொகை, வரி விவர அறிக்கைகள் தாக்கல் செய்வதை கண்காணித்தல், வரி விவர அறிக்கைகளின் கூர்ந்தாய்வு, வரி விதிப்பு மற்றும் வருவாய் நிலுவைகளை வசூல் செய்தல் போன்ற முக்கிய பணிகளில் வணிகவரித் துறை அதிகமாக கவனம் செலுத்தி வருகிறது.

நுண்ணறிவுப் பிரிவின் ஆய்வுக் குழுக்கள் மற்றும் சுற்றும் படைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதியதாக வரி ஆய்வுக் குழு மற்றும் தணிக்கைக் குழுக்களை உருவாக்குதல், பணித்தரம் உயர்த்தப்பட்ட வரி வசூல் ஆய்வாளர்கள் மூலம் வரி வருவாயை உயர்த்துதல், தரவு பகுப்பாய்வு தீர்வு சேவைகளை வழங்குவதற்காக ஹைதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தை (IIT) ஈடுபடுத்துதல் போன்ற நல்ல பல திட்டங்களை திறம்பட செயல்படுத்தியதன் பயனாக வணிகவரித்துறையில் கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டது.



நுண்ணறிவுப் பிரிவின் ஆய்வு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, சரக்குகள் வழங்காமல், விலைப் பட்டியல் மட்டும் வழங்கிய 411 போலிப்பட்டியல் வணிகர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொ ள்ளப்பட்டு வருகிறது. முகவரியில் இல்லாதவை என கண்டறியப்பட்ட நிறுவனங்களின் பதிவுச் சான்றுகள் உடனடியாக இடைநிறுத்தம் செய்யப்பட்டதுடன், பயனாளிகள் பெற்ற உள்ளீட்டு வரி வரவினை மீட்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், போலி பட்டியல் வணிகம் செய்ததாக கண்டறியப்பட்ட இரண்டு இனங்களில், தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, பிரிவு 132-ன் கீழ் வழக்கு தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நுண்ணறிவுப் பிரிவில் சுற்றும் படைகளின் எண்ணிக்கை 55-இல் இருந்து 100-ஆக உயர்த்தப்பட்டது. மேலும் 100 புதிய வாகனங்கள் மற்றும் கையடக்க அலகுகள் இந்த சுற்றும் படைகளுக்கு வழங்கப்பட்டது. சுற்றும் படைகளை மேம்படுத்தியதன் விளைவாக, 2020-2021-ஆம் ஆண்டில் சுற்றும் படைகளால் வசூலிக்கப்பட்ட வருவாயான ரூபாய் 11.69 கோடியுடன் ஒப்பிடுகையில், 2021-2022-ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூபாய் 73.22 கோடி வருவாயில் கூடுதலாக ரூபாய் 61.53 கோடியும், 2022-2023-ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூபாய் 222.49 கோடி வருவாயில் கூடுதலாக ரூபாய் 210.80 கோடியும், 2023-2024-ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூபாய் 238.94 கோடி வருவாயில் கூடுதலாக ரூபாய் 227.25 கோடியும், திரளாக கடந்த மூன்று ஆண்டுகளில் ஆக மொத்தம் 499.58 கோடி ரூபாய் வருவாய் சுற்றும் படைகளால் கூடுதலாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு குழுக்களின் எண்ணிக்கையை 52-இல் இருந்து 100-ஆக அதிகரித்து, ஆய்வுகளின் தரத்தில் கவனம் செலுத்தியதன் விளைவாக, ரூபாய் 585.90 கோடி கூடுதலாக வசூலிக்கப்பட்டுள்ளது.

01.07.2017 முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், தணிக்கை நடவடிக்கைகளில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியிருந்ததால் 05.07.2023 முதல் தணிக்கைப் பிரிவு ஒன்று தனியாக உருவாக்கப்பட்டது. உதவியாளர் பணி நிலையிலிருந்து பணித்தரம் உயர்த்தப்பட்ட துணை மாநில வரி அலுவலர்கள் மற்றும் மாநில வரி அலுவலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட 60 தணிக்கைக் குழுக்களைக் கொண்ட தணிக்கைப் பிரிவால் 159.85 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

மேலும், உதவியாளர் பணி நிலையிலிருந்து துணை மாநில வரி அலுவலர்களாக பணித்தரம் உயர்த்தப்பட்ட 338 வரி வசூல் ஆய்வாளர்கள் மூலம் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய இரு மாதங்களில் மட்டும் 250.76 கோடி ரூபாய் வரி நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

வருவாய் ஆதாரங்களை ஆய்வு செய்திடவும், வரி ஏய்ப்பு நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்திடவும், வரி ஆய்வுக் குழு 30.12.2022-இல் உருவாக்கப்பட்டது. இக்குழு, IGST செட்டில்மெண்ட்டை அதாவது ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரித் தீர்வையை பகுப்பாய்வு செய்ததில், மார்ச், 2024-இல் கூடுதலாக 510.09 கோடி ரூபாய் IGST வரித் தீர்வு மாநிலத்திற்கு பெறப்பட்டது.

வரி இழப்பை ஆய்வு செய்து, வருவாய் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான தரவு பகுப்பாய்வு தீர்வு சேவைகளை வழங்குவதற்காக ஹைதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் வணிகவரித் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இந்நிறுவனம் 07.12.2023 முதல் மூன்று ஆண்டுகளுக்கு இச்சேவைகளை வழங்கும். 2018-2019-ஆம் வரிவிதிப்பு ஆண்டிற்கு இந்நிறுவனம் மேற்கொண்ட கூர்ந்தாய்வு மூலம் 07.12.2023 முதல் 31.03.2024 வரையிலான சுமார் நான்கு மாதங்களிலேயே 102 கோடி ரூபாய் வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

### ரூ. 22 கோடியில் – திருவள்ளூர் கோட்டத்திற்கு உட்பட்ட அலுவலகங்களுக்கு புதிய ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டிடம்!

தலைவர் கலைஞர் அவர்களால் வணிகப் பெருமக்களின் நலனிற்காக நாட்டிலேயே முன்னோடியாக வணிகர் நல வாரியத்தை தோற்றுவித்து, அதன் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. வணிகர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை செம்மையாக கொண்டு சேர்த்திடுவதற்கு ஏதுவாக, முதலமைச்சர் அவர்கள் 2023-2024-ஆம் ஆண்டில் வணிகர் நல வாரியத்தில் அலுவல் சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20-லிருந்து 30-ஆக உயர்த்தியுள்ளார்கள். வணிகர் நல வாரியம் வழங்கும் நலத்திட்ட உதவிகள் மூலம் மொத்தம் 8.882 உறுப்பினர்கள் பயன்பெற்றுள்ளனர். தற்போது தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் 88,216 வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர்.

மேலும், கடந்த ஆண்டு இறுதியில் மிக்ஜாம் புயல் பாதித்த மாவட்டங்களான சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திரு வள்ளூரில் உள்ள வணிகர்களுக்கு, தாமதக் கட்டணம் மற்றும் வட்டி இல்லாமல் படிவம் GSTR 3-பி வரி விவர அறிக்கை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 27.12.2023 வரை நீட்டிக்கப்பட்டது.

அதேபோல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மற்றும் விருதுநகரில் உள்ள வணிகர்களுக்கு, தாமதக் கட்டணம் மற்றும் வட்டியின்றி படிவம் GSTR 3-பி வரி விவர அறிக்கை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 10.01.2024 வரை நீட்டி க்கப்பட்டது.

மேற்கண்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ள வணிகர்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் 2022-2023-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர வரி விவர அறிக்கை தாமதக் கட்டணம் இன்றி தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 10.01.2024 வரை நீட்டிக்கப்பட்டது.

மேலும், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி, ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள வணிகர்களுக்கு, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006-இன்படி 2022-2023-ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை WW படிவத்தில் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் 31.01.2024 வரை நீட்டிக்கப்பட்டது.

வரி செலுத்துவோர் எளிய முறையில் வணிகம் செய்வதை வணிகவரித் துறை ஊக்குவிக்கிறது. இதன் தொடர்ச்சியாக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ், பதிவு, அறிக்கைகள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், திருப்புத்தொகை பெறுதல் போன்ற வரி செலுத்துவது தொடர்பான பலவகையான வணிக நடவடிக்கைகளை இணைய வழியாகவே மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மின்னணு முறையில் வரி செலுத்துவது குறித்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்கு தனியாக ஒரு கட்டணமில்லா மாநில உதவி மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், வரி செலுத்துவோர் வரி அறிக்கைகள் தாக்கல் செய்வதில் உதவுவதற்காக கட்டணமில்லா சேவை மையம் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது. வரி செலுத்துவோர் அறிக்கைகளை தாமதமாக தாக்கல் செய்வதைத் தடுக்கும் வகையில், ஒரு புதிய OUTBOUND CALL CENTRE துவக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

அதிக பணியாளர்களை துறையின் உயர்பணிகளில் ஈடுபடுத்தும் வண்ணம், 2023-2024-ஆம் ஆண்டில், நீண்ட காலமாக நிலுவையில் இருந்த பதவி உயர்வுகள் துறையின் பல்வேறு நிலைகளில் உத்தரவிடப்பட்டு, 6 கூடுதல் ஆணையர்கள், 23 இணை ஆணையர்கள், 76 துணை ஆணையர்கள், 96 உதவி ஆணையர்கள், 296 மாநில வரி அலுவலர்கள் மற்றும் 975 துணை மாநில வரி அலுவலர்கள் ஆகியோருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. எதிர் வரும் 2024-2025-ஆம் ஆண்டிலும், வணிகர் நலனை கருத்தில் கொள்ளும் அதே சமயத்தில் அரசுக்கு வருவாயை அதிகமாக ஈட்டித் தருவதிலும் வணிகவரித் துறை உரிய பங்களிப்பை தந்து சிறப்பாக செயல்படும் என்ற உறுதியை இம் மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

**பத்திரப் பதிவுத் துறை**

பத்திரப் பதிவுத் துறையானது, அரசுக்கு வரும் மொத்த வருவாயில் 14 சதவிகிதத்தை அளித்து, வருவாய் ஈட்டும் துறைகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது என்பதை அனைவரும் அறிவோம்.

கழக அரசு பதவியேற்றவுடன் பத்திரப் பதிவுத்துறையின் சேவையை மக்களுக்கேற்ற வகையில் எளிதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் மாற்றியமைக்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இட்ட உத்தரவை நாங்கள் சிரம் தாழ்ந்து ஏற்றுக்கொண்டு அதனை நிறைவேற்றும் வகையில் பதிவுத்துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்தி உள்ளோம். அதன் தொடர்ச்சியாக கடந்த நிதியாண்டிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாவதாக பொதுமக்கள் பதிவு செய்திடும் ஆவணங்களை முறையாக பாதுகாத்திடவும், எந்தவித மோசடிகளுக்கு இடம் அளிக்காமல் உறுதி செய்திடவும் நம்பிக்கை இணையம் தொழில்நுட்பமானது (BLOCK CHAIN TECHNOLOGY) முதல் கட்டமாக 1.5.2023 முதல் பதிவு செய்யப்பட்ட அனைத்து டிஜிட்டல் ஆவணங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த முறையின் கீழ் மின்னணு மயமாக்கப்பட்ட ஆவணங்களில் பதிவு நேரம் குறித்த முத்திரைகள் இருப்பதால் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மைத்தன்மை, திருத்தம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மோசடிகளுக்கு இடமளிக்காமல் பதிவு ஆவணங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

மேலும், சார்பதிவாளர் அலுவலகங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் விதமாக, ஐபி கேமரா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவறைகளில் வெளி நபர் நடமாட்டம் மற்றும் பதிவுகளை சேதப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை தடுப்பதற்காக கூடுதலாக இரண்டு ஐபி கேமராக்கள் பொருத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவண பதிவிற்காக வரும் பொது மக்கள் பதிவிற்கு தங்களுடைய வரிசை முறையினை வெளிப்படையாக அறிந்து

தொடர்ச்சி 5-ஆம் பக்கம்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பழ. சுப்பையா**

**ஜூன் 28 (2022)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், ஊராட்சி செயலாளர், இரண்டு முறை அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி பொருளாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இடையாத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**